JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//563 /2024 |
| | : | Prosecution P.W - 9 |
| NAME | : | பூங்கொடி சூசை |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 26.09.2024

முதல் விசாரணை

நான் வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் முன்பு கடைவைத்திருந்தேன். தற்போது கடை வைக்கவில்லை. அசா1 கிருஷ்ணன், அசா2 அந்தோணி ராஜ், அசா3 டேவிட் அமல்ராஜ், அசா4 செல்வராஜ், அசா5 ஜோசப்ராஜ், அசா6 அருமைக்கிளி, அசா7 பாலமுருகன், அசா8 செல்வராணி ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் சீட்டு நடத்தினார்கள். நான் சீட்டு சேர்ந்திருந்தேன். ஆஜர் எதிரிகள் சீட்டு சேர கேட்டார்கள். ஆஜர் எதிரிகள் வாரச்சீட்டு மாத சீட்டு, நடத்தினாகள்.

நான் ரூபாய் 61000 வாரச்சீட்டில் 5 சீட்டுகள் சேர்ந்தேன். நான் 23 வாரங்களுக்கு இந்த 5 சீட்டுகளையும் செலுத்தினேன். ரூபாய் 36950 செலுத்தியுள்ளேன்.

ரூபாய் 60000 வாரச்சீட்டில் 6 சீட்டுகள் சேர்ந்தேன். நான் 38 வாரங்கள் இந்த 6 சீட்டுகளையும் செலுத்தினே. ரூபாய் 70440 செலுத்தினேன்.

ரூபாய் 62000 வாரச்சீட்டில் 4 சீட்டுகள் சேர்ந்தேன். 09.10.2016 ல்

சேர்ந்தேன் நான் 118 வாரங்கள் இந்த 4 சீட்டுகளையும் செலுத்தினே். ரூபாய் 1,73,200 செலுத்தினேன்.

ரூபாய் 100000 மாதச்சீட்டில் 01.08.2017ம் தேதி ஆரம்பித்து ஒரு சீட்டு சேர்ந்தேன். நான் 18 மாதங்கள் இந்த 1 சீட்டை செலுத்தினே். ரூபாய் 68600 செலுத்தினேன்.

நான் மொத்தம் 3,49,190 ரூபாய் செலுத்தியுள்ளேன். 2019 பொங்கலுக்கு பிறகு ஆஜர் எதிரிகள் வெளியே சென்றுவிட்டார்கள். அதற்கு பிறகு அவர்கள் பணம் தரவில்லை நான் கஷ்டப்பட்டு பணம் செலுத்தினேன். (சாட்சி அழுதுகொண்டு சங்கடப்பட்டு பணம் செலுத்தியதாக சொன்னார்) அக்டோபர் மாதம் 22ம் தேதி 2019ம் ஆண்டு ஆஜர் எதிரிகள் வந்தார்கள். கோவிலில் கிருஷ்ணசாமி ஆஜர்எதிரி மாயவனிடமும். கிருஷ்ணசாமியிடமும் கேட்டதாக சொன்னார்கள். (சாட்சி ஆஜர் எதிரி மாயவனை பார்த்து கிருஷ்ணன் மகன் மாயவன் என்றும் மாயவநாதனை பார்த்து குத்தாலநாடார் மகன் மாயவநாதன் என்றும் அடையாளம் காட்டினார்) நானும் பணம் கேட்டேன். என்னை தேவிடியா மகனே, புண்ட மகனே, சிறுக்கி மகனே என்று அவமானமாக பேசினார்கள். அருவாளை எடுத்து வெட்டிவிடுவோம் என்று சொன்னார்கள். நாங்கள் போய் புகார் கொடுத்தோம். புகார் மனுவை ராமச்சந்திரன் மகன் கிருஷ்ணசாமி கொடுத்தார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

நீதிமன்ற கேள்வி போலிசார் என்னிடம் என்ன நடந்தது என்று கேட்டார்காள பதில் பணம் போட்டோம் என்று சொன்னேன்.

போலிசார் கேட்டபோது ஆஜர் எதிரிகளிடம் பணம் கொடுத்தோம் என்று சொன்னோம். ஆஜர்எதிரிகள் 10 வருட காலங்காளகா திறமையாக சீட்டு நடத்தினார்கள். அதனால் நம்பிக்கையாக சீட்டு போட்டோம்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சாட்சி சொல்வதற்கு அழைப்பாணை வந்ததாத என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்து அழைப்பானை வாங்கினேனா என்றால். சம்மன் தந்ததார்கள். நான் வாங்கிய சம்மனில் மரியசெல்வன் மகன் பூங்கொடி சூசை என்று இருந்ததா என்றால் ஆமாம்.

(இந்த சாட்சிக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி அழைப்பாணை கோட்டில் இருந்து அனுப்படவில்லை. இன்று இந்த சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரில்இருந்த காரணத்தினால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 311ன் கீழ் விசாரிக்கப்பட்டார். சாட்சி அழைப்பானை அனுப்பாமல் இருந்த போதிலும் ஆஜரில் இருந்த காரணத்தினால் இந்திய சாட்சி சட்டம் பிரிவு 311ன் கீழ் விசாரிக்கப்பட்டார். )

சாட்சி பட்டியலில் என்னுடைய பெயர் குறிப்பிட படவில்லை

என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி பட்டியலில் மாரிய செல்வம் என்வரின் மகன் பூங்கொடி சூசை இல்லை என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படாது என்றால் சரியல்ல.

நீதிமன்ற கேள்வி எனது அப்பா பெயர் என்ன என்றால்

பதில் மரிய செல்வ நாடார்

அசா1 கொடுத்த பொய் புகாரை முறையாக விசாரிக்காமல் சுயமாக சாட்சி பட்டியலில் இட்டு சாட்சிகளை போலிசார் தயாரித்ததாலும் என்னுடைய பெயர் என்னை போலிசார் விசாரிக்காததாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகளிடம் எந்த சீட்டு பணமும் போடவில்லை என்றால் சரியல்ல. போலிசார் வேண்டுகோளுக்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

01.08.2017 ம் தேதி ரூபாய் 100000 மாதச்சீட்டில் நான் சேர்ந்ததாக சொல்லும் நிலையில் என்னுடன் சேர்ந்த மற்ற நபர் பெயர் தெரியுமா என்றால் பீட்டர் தெரியும் மற்ற பெயர் தெரியவில்லை.

18 மாதம் நடந்த ரூபாய் 1 லட்சம் மாத சீட்டை யார் எல்லாம் எடுத்தார்கள் என்றால் யார் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. பீட்டர் எடுத்தார் எனக்கு தெரியும்.

01.08.2017 ம் தேதி ஆரம்பித்த சீட்டுக்கு மாதத்தில் எப்போது பணம் செலுத்துவேன் என்றால் ஆரம்பித்த இரண்டு நாளில் செலுத்துவேன். நான் செலுத்தியதாக சொல்லும் ரூபாய் 68600 தொகையை ஒவ்வொரு மாதமும் கழிவுத்தொகை போக செலுத்தியது என்றால் சரிதான். நான் ஒவ்வொரு மாதமும் எவ்வளவு தொகை செலுத்துகிறேன் என்று எழுதி வைத்திருப்பேன் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணையின் போது மேற்படி நான் எழுதிவைத்திருந்த சீட்டை கொடுத்தேன் என்றால் சரிதான். நான் ரூபாய் 60000 வாரச்சீட்டில், ரூபாய் 61000 வாரச்சீட்டில், ரூபாய் 62000 வாரச்சீட்டில் செலுத்திய தொகையின் விவரங்களை எழுதிவைத்த சீட்டை போலிசார் விசாரித்தபோது கொடுத்தேன் என்றால் சரிதான். போலிசாரிடம் கொடுத்த புகாரில் நானும் அருமைக்கிளியும், பாலமுருகனும், செல்வராணியும் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். ராமச்சந்திரன் மகன் கிருஷ்ணசாமியும் அந்த புகாரில் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். அசா1 கிருஷ்ணன், அசா2 அந்தோணி ராஜ், அசா3 டேவிட் அமல்ராஜ், அசா4 செல்வராஜ், அசா5 ஜோசப்ராஜ் ஆகியோர் புகார் மனுவில் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் கொடுத்த புகார்மனுவில் மரிய செல்வன் மகன் பூங்கொடி சூசை ஆகிய

நான் ரூபாய் 60000 வாரச்சீட்டில் 6 சீட்டுகளும், ரூபாய் 61000 வாரச்சீட்டில் 5 சீட்டுகளும், ரூபாய் 62000 வாரச்சீட்டில் 4 சீட்டுகளும், ரூபாய் 100000 மாதச்சீட்டில் 1 சீட்டும் போட்டேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ரூபாய் 61000 வாரச்சீட்டில் 121 சீட்டு எண்ணிக்கையில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

ரூபாய் 60000 வாரச்சீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் அது தெரியாது. மொத்தம் 120 சீட்டுகள்

ரூபாய் 62000 வாரச்சீட்டில் சீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது மொத்தம் 124 சீட்டுகள். கரைப்பான் சீட்டு ஒன்று.

2019 பொங்கலில் பொங்கலுக்கு பிறகு எதிரிகள் வெளியே சென்றுவிட்டார்கள் என்று சொல்லியுள்ளதில் எதற்காக சென்றார்கள் என்றால் ஒருவர் வெளியே சென்றுவிட்டார். வாத்தியார் ஊரில் தலைமறைவாக இருந்தார். புகார் கொடுக்கும் முன்பு வெளியே சென்றுவிட்டார். நான் எதிரிகள் வெளியே சென்றுவிட்டார்கள் என்ன காலகட்டத்தில் 1ம் எதிரி வாத்தியார் வேலை பார்த்துக்கொண்டிருந்தார் என்றால் ஆமாம். நாங்கள் 1ம் எதிரி வாத்தியார் வேலை பார்த்த போது புகார் கொடுத்தேமா என்றால் புகார் கொடுத்த முன்பு தலைமறைவாக இருந்தார்., புகார் கொடுத்த பின்பு வந்தார். புகார் கொடுத்த பின்பு போலிசார் எதிரிகளை விசாரித்தார்களா என்றால் ஆமாம். புகார் கொடுத்தபின்பு எதிரிகளை போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த போது விசாரித்தார்கள். மாயவன் கோவிலும் 1ம் எதிரி மாயவன் வீடும் எதிர் எதிராக உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி மாயவன் வீட்டில் CCTV Camera உள்ளது என்றால் சரிதான். எதிரிகளிடம் பணம் கேட்டதாக சொல்லும் நாளில் 1ம் எதிரி மாயவன் வீட்டில் CCTV Camera இருந்தது என்றால் சரிதான். புகார் கொடுத்த பின்பு எத்தனை நாள் கழித்து என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றால் உடனே விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னத்தைத்தான் போலிஸ்விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் சீட்டு நடத்தியது கிடையாது என்றாலும் நான் எதிரிகளிடம் சீட்டு எதுவும் போட வில்லை என்றாலும் அக்டோபர் 22ம் தேதி 2019 ஆண்டு எதிரிகளிடம் கிருஷ்ணசாமி பணம் கேட்டதாக கூறுவதும் எங்களை எதிரிகள் தேவிடியா மகனே, புண்ட மகனே, சிறுக்கி மகனே என்று அவமானமாக பேசியது கிடையாது என்றாலும் அருவாளை எடுத்து வெட்டிவிடுவோம் என்று சொன்னது கிடையாது என்றாலும் சரியல்ல. 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

போலிசார் விசாரணையின் போது 09.10.2016ம் தேதி ரூபாய் 62000 சீட்டிலும், 01.08.2017ம் தேதி ரூபாய் 1 லட்சம் சீட்டில் சேர்ந்தேன் என்று சொன்னேன் என்றால் சரிதான். என்னை ஆண் போலிசார் விசாரித்தாரா பெண் போலிசார் விசாரித்தாரா என்றால் ஆண் போலிஸ் விசாரித்தார். ரூபாய் 1 லட்சம் சீட்டில் 18 மாதம் முடிந்த பிறகு சீட்டு எடுக்காத மீதி உள்ள 3 நபர்கள் யார் என்றால் அது தெரியவில்லை. ஒவ்வொரு சீட்டுக்கும் ஏலம் நடக்கும்போது பணம் செலுத்துவோம் என்றால் ஞாயிற்று கிழமை ஏலம் நடக்கும் ஒரு நாள் முன்னே பின்னே செலுத்துவேன். ஏலம் எடுத்தவர்களுக்கு பணம் கொடுப்பது ஒரு நாள் முன்னே பின்னே கொடுப்பார்கள் என்றால் சரிதான். மாதசீட்டு எந்த தேதியில் ஏலம் விடுவார்கள் என்றால் ஆங்கில மாதத்தில் முதல் வாரம் ஏலம் நடக்கும். ஒவ்வொரு ஏலச்சீட்டு நடக்கும்போதும் கழிவுபோக மீதித்தொகையை செலுத்துவேன் என்றால் சரிதான். நான் போட்டுள்ள 5 சீட்டுகளுக்கும் ஒரே ஏலத்தில் ஒரே கழிவுதான் என்றால் சரிதான். ஒரே நபர் ஒரு வாரத்தில் ஒரு சீட்டு எடுத்த பின்பு மறு வாரம் அதே நபர் அதே சீட்டில் சீட்டு எடுக்க முடியுமா என்றால் முடியும். ஒரு நபர் ஒரு சீட்டு ஏலம் எடுத்த பின்பு அந்த சீட்டுக்கு உள்ள முழு வாரத்தொகையை அதற்கு பிறகு வரும் சீட்டுகளில் செலுத்துவேண்டும் என்றால் சரிதான். நான் எத்தனையாவது எடுத்தேன் என்றால் நான் ஒரு சீட்டும் ஏலம் எடுக்கவில்லை. முன்பு நடந்த சீட்டுகளில் எதிரிகள் ஏலத்தொகையை கொடுத்துள்ளார்கள். நான் ஏலத்தில் கலந்துகொள்வேனா என்றால் கலந்துகொள்ளவில்லை. நம்பிக்கையில் இருந்தேன். இரண்டாவது சீட்டு மாயவன் கோவிலுக்குத்தான் என்றால் சரிதான். கோவிலில் சீட்டு நடத்துவதால்தான் இரண்டாவது சீட்டு கோவிலுக்கு என்றால் சரிதான். 2019 பொங்கலுக்கு முன்பு சீட்டு எடுத்த நபர்கள் 2019 பொங்கலுக்கு பின்பு பணம் செலுத்தவில்லை என்றால் சரிதான் எதிரிகள் போய் விட்டார்கள். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் கோவிலில் வைத்து விசாரித்தார்கள். நான் எங்கு கடை வைத்திருந்தேன் என்றால் 2ம் எதிரியின் பெரியப்ப செல்லைய நாடார் இடத்தில் கடை வைத்திருந்தேன். 2ம் எதிரி மாயவநாதன் வீட்டின் அருகில் தான் கடை வைத்திருந்தேன் என்றால் சரிதான். அவர் வீட்டிற்கு மேற்கு புறத்தில் கடை வைத்திருந்தேன். தற்போதுஅந்த கடை நடக்கவில்லை என்றால் எனக்கு உடம்பு முடியவில்லை. இரண்டாம் எதிரி கடையை காலி செய்ய சொன்னதால் அவருக்கு எதிராக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டாம் எதிரி ஊரை விட்டு போவதற்கு 3மாதத்திற்கு முன்பே கடையை நிறுத்தி விட்டேன்.

எனக்கு வார வருமானம் எவ்வுளவு என்றால் எனது பிள்ளைகள் டியூசன் எடுக்கும் விடுமுறையில் வேலை செய்யும் நான் கடை வைத்திருந்தேன், வாரம் ரூ.8000 வரும். நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கையில் பணம் இருந்தது, அதிலிருந்து கொடுத்தேன். நான் வாரம் ரூ.10000 செலுத்த வருமானம் இல்லை என்றால் சரியல்ல. நான் சேர்த்து வைத்திருந்த பணத்தையும் வைத்து செலுத்தினேன். எனது வருமான விவரம் குறித்து போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் போலிசார் அதை பற்றி விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல் 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியோ அவருக்கு வேண்டப்பட்டவரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்த வில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னத்தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபருக்கு உடனே சீட்டு பணத்தை கொடுத்து விடுவார்கள் என்றால் சரியல்ல. ஒருநாள் முன்னபின்னே கொடுப்பார்கள்.

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//563 /2024 |
| | : | Prosecution P.W - 8 |
| NAME | : | செல்வராணி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 26.09.2024

முதல் விசாரணை

நான் வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். அசா1 கிருஷ்ணன், அசா2 அந்தோணி ராஜ், அசா3 டேவிட் அமல்ராஜ், அசா4 செல்வராஜ், அசா5 ஜோசப்ராஜ், அசா6 அருமைக்கிளி, அசா7 பாலமுருகன் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் எனக்கு நன்றாக தெரியும். ஆஜர் எதிரிகள் சீட்டுபிரித்தார்கள் நம்பி்கையாக சீட்டு போடுங்கள் என்று சொன்னார்கள். வாரச்சீட்டுகளும் மாதசீட்டுகளும் பிரித்தார்கள். நான் ரூபாய் 50000 வாரச்சீட்டில் ஒரு சீட்டும், ரூபாய் 30000 வாரச்சீட்டில் ஒருசீட்டும் செலுத்தினேன். ரூபாய் 50000 சீட்டில் 101 வாரங்கள் செலுத்துவேண்டும். ரூபாய் 30000 சீட்டில் 101 வாரங்கள் செலுத்தவேண்டும்.

ரூபாய் 50000 சீட்டில் 42 வாரங்கள் ரூபாய் 14 ஆயிரத்திற்கு மேலாக செலுத்தியுள்ளேன்.

ரூபாய் 30000 சீட்டில் 52 வாரங்கள் ரூபாய் 14 ஆயிரத்திற்கு மேலாக செலுத்தியுள்ளேன்.

மொத்தம் 29090 ரூபாய் பணம் செலுத்தியுள்ளேன்.

2019 கார்த்திகை மாதம் வரை வாங்கினார்கள். நான் செலுத்திய பணம் கிடைக்கவில்லை. பணத்தை கேட்டதற்கு தேவிடியா மகனே, புண்ட மகனே என்று அசிங்கமாக திட்டினார்கள். கஷ்டப்பட்டு பணம் செலுத்தினேன். நான் எப்போதும் 7 மணிக்கு பணத்தை செலுத்தியுள்ளேன். 8 மாதங்கள் ஆஜர் எதிரிகள் வெளியூர் சென்று விட்டார்கள் அதற்கு பிறகு கார்த்திகை மாதம் ஆஜர் எதிரிகள் வந்த பிறகு கிருஷ்ணன் உடன் கேட்டதற்கு அசிங்கமாக திட்டினார்கள். அதற்கு பிறகு கடையம் காவல் நிலையம் சென்றோம். போலிசார் விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

ரூபாய் 50000 சீட்டு எந்த தேதியில் ஆரம்பித்தார்கள் என்றால் 4 வருடத்திற்கு முன்பு சீட்டு போட்டேன். ரூபாய் 30000 சீட்டு எந்த தேதியில் ஆரம்பித்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. 2019 ஜனவரிக்கு முன்பு எந்த தேதியில் ரூபாய் 50000 சீட்டு ஆரம்பித்தார்கள் என்றால் நான் 42 சீட்டு செலுத்தியுள்ளேன். நான் கடையம் காவல் நிலையத்திற்கு எப்போது சென்றேன் என்றால் மாலையில் சென்றோம். எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மாலை 7 மணி அளவில் சென்றோம். புகார் மனுவில் நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் நான் கையொப்பம் செய்வதில்லை. கைரேகை போட்டேன். என்னுடன் அருமைக்கிளி, பூங்கொடி சூசை, பாலமுருகன் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். நான் வாரத்திற்கு எவ்வளவு பணம் செலுத்துவேன் என்றால் கழிவைத் கழித்துவிட்டு சீட்டு பணம் செலுத்துவேன். ரூபாய் 50000 சீட்டுக்கு வாரம் ரூபாய் 500 என்றாலும் ரூபாய் 30000 சீட்டுக்கு வாரம் ரூபாய் 300 என்றாலும் சரிதான். நான் ஒவ்வொரு வாரமும் எவ்வளவு பணம் செலுத்தினேன் என்று எழுதி வைத்த நோட்டை போலிசிடம் கொடுத்தேனா என்றால் நான் எழுதி வைக்கவில்லை. மற்றவர்கள் எழுதிவைத்ததை வைத்து சொன்னேன். நான் எதன் அடிப்படையில் ரூபாய் 29090 என்று சொல்கிறேன் என்றால் என்னுடன் சீட்டு போட்டவர்கள் எழுதிவைத்ததை பார்த்து சொல்கிறேன். யார் எழுதி வைத்தார்கள் என்றால் எல்லோரும் எழுதி வைத்தார்கள். அவ்வாறு எழுதி வைத்தவர்கள் பெயர் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது ,இன்று சாட்சி சொல்ல வந்தவர்களிடமும் நான் சீட்டு தொகை பற்றி கேட்டேன். பக்கத்தில் மற்ற நபர்கள் எழுதி வைத்தார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் சீட்டு பிரிக்கவில்லை என்பதால்தான் நான் எந்த எந்த வாரங்களில் எவ்வளவு தொகை செலுத்தினேன் என்று என்னால் சொல்ல இயலவில்லை என்றால்

சரியல்ல. நான் சீட்டு பணம் செலுத்தினேன். 8 மாதங்கள் எதிரிகள் வெளியூர் சென்றதாக சொல்லியுள்ளதில் நான் அதற்கு முன்பு புகார் கொடுத்தேனா என்றால் ,இல்லை. 1ம் எதிரி அரசு ஆசிரியர் என்றால் சரிதான். கிருஷ்ணனின் ஆதராவளாரான ராஜதுரை பொன்னுச்சாமி என்ற பொன்ராஜ் மாயவன் கேவிலில் ஒரு தலைவராக இருக்கிறார் என்றால் 1ம் எதிரி மாயவன் ஒரு தலைவராக இருக்கிறார் என்றாலும் சரிதான். 1ம் எதிரி மாயவன் எவ்வளவு கோவிலில் தலைவராக இருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. அவர்கள் அன்னியர்கள் நாங்கள் வேறு அவர்கள் வேறு சீட்டு போடச்சொன்னார்கள் சீட்டுபோட்டோம். எதிரிகள் என்னை சீட்டு போடச்சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஒவ்வொரு வாரமும் சீட்டுத்தொகை ரூபாய் 500 மற்றும் 300 ஐ முதலில் செலுத்தவேண்டும் என்றால் சரிதான். சீட்டு ஏலத்திற்கு முன் செலுத்துவோம். ஏலத்தில் கழிவுத்தொகையை கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் கழிவுத்தொகையை வேறுவேறாகஇருக்கும் என்றால் சரிதான். இரண்டாவது வாரம் முழுத்தொகை செலுத்தி அந்த முழுத்தொகை கோவிலுக்கு போகும் என்றால் சரிதான். நான் ஒரு சீட்டு செலுத்தி உள்ள நிலையில் மற்ற நபர்கள் ஒரே சீட்டில் மூன்று, நான்கு சீட்டு செலுத்துவார்கள் என்றால் சரிதான். ஓரே நபர் ஒரு சீட்டு எடுத்த பிறகு அடுத்த வாரம் சீட்டு எடுக்க முடியுமா என்றால் எடுப்பார்கள். நான் ஏலத்தில் கலந்துகொண்டுள்ளேனா என்றால் இல்லை. யார், யார் ஏலம் எடுத்தார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். ஏலம் கேட்கும் நபரிடம் கழிவுத்தொகை போக மீதித் தொகையை கோவிலில் வைத்து கொடுப்பார்கள் என்றால் சரிதான். என்னை போலிசர் விசாரித்தார்களா என்றால் ஆமாம். போலிசார் விசாரணையின்போது நான் பணம் செலுத்தும தொகையையும் கழிவுத்தொகையையும் சொல்லசொல்ல போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். போலிசாரிடம் விசாரணையில் கழிவுத்தொகை வாங்கிய விவரம் மற்றும் இரண்டாவது சீட்டு கோவிலுக்கு என்று சொன்ன விவரம் ஆகியவற்றை எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல் 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியோ அவருக்கு வேண்டப்பட்டவரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்த வில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்

சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னத்தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.
1ம் எதிரி தரப்பில்செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//563 /2024 |
| | : | Prosecution P.W - 7 |
| NAME | : | பாலமுருகன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 26.09.2024

முதல் விசாரணை

நான் அயோத்திமா நகரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா1 கிருஷ்ணன், அசா2 அந்தோணி ராஜ், அசா3 டேவிட் அமல்ராஜ், அசா4 செல்வராஜ், அசா5 ஜோசப்ராஜ், அசா6 அருமைக்கிளி ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் ஆஜர் எதிரிகள் மாயவன் கோவிலில் சீட்டு நடத்தினார்கள். நான் அந்த கோவிலில் ஒரு வரிதாரர். என்னிடம் ஆஜர் எதிரிகள் நம்முடைய கோவிலிலும் நம்பிக்கையின் பேரில் சீட்டு போடுங்கள் என்று சொன்னார்கள். அதனால் நான் சீட்டு போட்டேன். ஆஜர் எதிரிகள் 7 வாரச்சீட்டு குருப்புகளையும்,ஒரு மாத சீட்டையும் நடத்தினார்கள். நான் ரூபாய் 50000 வாரச்சீட்டில் 5 சீட்டுகளும், ரூபாய் 61000 வாரச்சீட்டில் 5 சீட்டுகளும், ரூபாய் 33000 வாரச்சீட்டில் 5 சீட்டுகளும், ரூபாய் 62000 வாரச்சீட்டில் ஒரு சீட்டும், ரூபாய் 60000 வாரச்சீட்டில் 2 சீட்டுகளும் போட்டேன்.

ரூபாய் 50000 சீட்டில் 42 வாரங்கள் ரூபாய் 56950 ஆக 5 சீட்டுகளுக்கு செலுத்தினேன்.

ரூபாய் 61000 சீட்டில் 23 வாரங்கள் ரூபாய் 36950 ஆக 5 சீட்டுகளுக்கு செலுத்தினேன்.
ரூபாய் 62000 சீட்டில் 118 வாரங்கள் ரூபாய் 58700 ஆக 1 சீட்டுக்கு செலுத்தினேன்.
ரூபாய் 33000 சீட்டில் 72 வாரங்கள் ரூபாய் 86700 ஆக 5 சீட்டுகளுக்கு செலுத்தினேன்.
ரூபாய் 60000 சீட்டில் 33 வாரங்கள் ரூபாய் 43300 ஆக 2 சீட்டுகளுக்கு செலுத்தினேன்.

நான் செலுத்திய தொகைகளை எனக்கு திருப்பி தரவில்லை. 2019 பொங்கலுடன் சீட்டை நிறுத்திவிட்டார்கள் நான் மொத்தம் ரூபாய் 3,12,150 பணம் செலுத்தியுள்ளேன். ஆஜர் எதிரிகள் ஊரில் இல்லாமல் வெளியே சென்றுவிட்டார்கள் 22.10.2019 ம் தேதி காலை 7.00 மணிக்கு கோவிலில் ஆஜர் எதிரிகள் இருக்கிறார்கள் என்று கேள்விபட்டேன். கிருஷ்ணன் என்பவர் பணம் கேட்பதாக கேள்விபட்டேன் நானும் அங்கு சென்றேன். அப்போது கிருஷ்ணன் பணம் கேட்டபோது ஆஜர் எதிரிகள் இரண்டு பேரும் புண்ட மகனே என்று பணம் தரமுடியாது நீங்கள் எங்கு வேண்டுமானலும் போய்க்கொள்ளுங்கள் என்றும் பேசினார்கள். இதற்குமேல் எங்களிடம் கேட்டால் அடித்து கொலை பண்ணி விடுவோம் என்று சொன்னார்கள். அதனால் அன்று மாலை 5.00 மணியளவில் குத்தால ராமசுந்தரம் மகன் கிருஷ்ணனும் மற்றும் எல்லோரும் கடையம் காவல் நிலையத்திற்கு சென்று புகார்கொடுத்தோம். கிருஷ்ணண் உள்ளே சென்று புகார் கொடுத்தார். ஆஜர் எதிரிகள் பேசியதால் மனக்கஷ்டம் ஆனது. என்னைபோல் நிறையை பேர் பணம் செலுத்தினார்கள். யாருக்கும் பணம் திருப்பிகொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் எட்டு படித்துள்ளேன். நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தோம் என்றால் மாலை 5.00 மணிக்கு கொடுத்தோம். புகார் கொடுத்த அன்று காலையில் நானும் மற்றவர்களும் காவல் நிலையம் சென்றோமா என்றால் இல்லை. ரூ.60000 சீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 120 நபர்கள் கோவில் கரைப்பார் சீட்டு ஒன்று. ரூ.33000 சீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 110 நபர்கள். ரூ.62000 சீட்டில் எத்தனை நபர்கள் என்றால் 124 நபர்கள். ரூ.61000 சீட்டில் எத்தனை நபர்கள் என்றால் 122 நபர்கள். மாயவன் கோயிலில் 1 ம் எதிரி மாயவன் ஒரு தலைவராகவும், ராஜதுரை பொன்னுசாமி என்ற பொன் ராஜ் ஒரு

தலைவராகவும் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. தலைவர்கள் என்று இப்போதைக்கு யாரும் கிடையாது. 2019ம் ஆண்டு யார் தலைவராக இருந்தார் என்றால் 1ம் எதிரி மாயவன் தான் தலைவராக இருந்தார். 1ம் எதிரி எவ்வுளவு நாட்களாக தலைவராக இருந்தார் என்றால் 2010ல் இருந்து தலைவராக இருந்தார். இரண்டு குழுக்களாக கோவிலில் எத்தனை வருடங்கள் இருக்கிறது என்றால் 2019ம் ஆண்டுக்கு பிறகு சீட்டு நடக்கவில்லை என்பதால் இரண்டாக இருக்கிறது.

நான் காவல் நிலையத்தில் புகார் மனுவில் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. நான் புகார் மனுவை படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். புகார் மனுவில் யாரெல்லாம் கையொப்பம் செய்தார்கள் என்றால் கிருஷ்ணன், அந்தோணி ராஜ், ராஜாமணி கையொப்பம் செய்தார்கள். அந்த புகார் மனுவில் பாலமுருகனாகிய நான் ரூ.61000 சீட்டு, ரூ. 62000 சீட்டு, ரூ.60000 சீட்டு,ரூ.33000 சீட்டுபோட்டிருந்தேன் என்று குறிப்பிடபட்டிருந்தது என்றால் சரிதான்.

ஒவ்வொரு நபர்களும் எத்தனை சீட்டுகள் எவ்வுளவு போட்டிருந்தார்கள் என்று புகார் மனுவில் குறிப்பிடபட்டிருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. புகார் மனுவில் அவர்கள் கையொப்பம் செய்தததை பார்த்தேன். என்னுடைய பெயர் இருந்தது. என்னுடைய சீட்டு தொகை இருந்ததா என்று எனக்கு தெரியாது.

காவல் நிலையத்தில் எதிரிகளை விசாரித்தார்களா என்றால் நான் காவல் நிலையத்தில் இருக்கும் போது விசாரிக்கவில்லை,விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. எதிரிகள் எவ்வுளவு நாட்களாக வெளியே இருந்தார்கள் என்றால் 1வாரம் கழித்து வந்தார்கள். 1ம் எதிரி ஆசிரியர் வேலை பார்த்து கொண்டு தான் இருந்தாரா என்றால் அவர் ஊரில் இருந்தாரா வேலைக்கு போனாரா என்று எனக்கு தெரியாது. மருத்துவ விடுப்பில் கூட இருந்திருக்கலாம். நான் எத்தனை சீட்டு ஏலம் எடுத்துள்ளேன் என்றால் ரூ.62000 சீட்டில் 4 சீட்டு எடுத்துள்ளேன். 61000 சீட்டில் ஏலம் எடுக்கவில்லை, ரூ.33000 சீட்டில் ஏலம் எடுக்கவில்லை, ரூ.60000 சீட்டில் 3 சீட்டு எடுத்துள்ளேன்.

என்னை போலிசார் விசாரித்த போது ரூ.62000 சீட்டில் 4 சீட்டு எடுத்துள்ளேன் என்றும் ரூ.60000 சீட்டில் 3 சீட்டு எடுத்துள்ளேன் என்றும் சொன்னேன் என்றால் நான் எடுக்காத சீட்டுக்கு தான் புகார் கொடுத்தேன். நான் எடுக்காத சீட்டு என்பது ரூ.33000 சீட்டும், ரூ.61000 சீட்டும் தான் என்றால் ஆமாம். ரூ. 50000 சீட்டும் எடுக்காத சீட்டு தான். நான் அன்று காலையில் எத்தனை மணிக்கு கோயிலுக்கு சென்றேன் என்றால் 7 மணி இருக்கும். எவ்வுளவு நேரம் கோயிலில் இருந்தேன் என்றால் கால் மணிநேரம் இருக்கும். புகாரை யார் எழுதினார் என்றால் கிருஷ்ணன்

கொடுததார் யார் எழுதினார் என்று தெரியாது. புகார் எங்கு வைத்து எழுதபட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுக்க சென்றேன். புகார் கொடுக்கும் போது நான் உடன் இருந்தேனா என்றால் அவர்கள் உள்ளே சென்று புகார் கொடுத்தார்கள் நான் வெளியே இருந்தேன். காவல் நிலையத்தில் எவ்வுளவு நேரம்இருந்தோம் என்றால் சுமார் 1 மணி நேரம் இருந்தோம்.

என்னை போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்தும் மறுநாள் ஊருக்கு வந்தும் விசாரித்தார்கள். என்னை போலிசார் விசாரிக்கும் போது ஒவ்வொரு சீட்டுக்கும் எவ்வுளவு பணம் கொடுத்தேன் என்று விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் மொத்தம் எவ்வுளவு பணம் என்று சொன்னேன். ஒவ்வொரு வாரத்திற்கும்எவ்வுளவு செலுத்தினேன் என்று தனித்தனியாக சொல்லவில்லை. என்னிடம் வாக்குமூலம் எஸ்ஐ வாங்கினாரா, ஏட்டு வாங்கினாரா என்றால் எஸ்ஐ வாங்கினார். ஆண் எஸ்ஐ என்றால் சரிதான்.

இரண்டு பிரிவாக சாமி கும்பிடுவதில் நான் யார் பிரிவில் இருக்கிறேன் என்றால் நான் அந்த பிரிவில் இருக்கிறேன். மாயவன் பிரிவில் நான் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிரி மாயவன் ஊரில் உள்ள மாயவன் கோயிலில் தலைவராக இருப்பதால் அவரை மாற்ற வேண்டும் என்பதற்காக அவரின் எதிர் அணியுடன் சேர்ந்து சீட்டே நடத்தாத 1ம் எதிரி மீது அவர் வேலைக்கு பங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அவர் சீட்டுநடத்தியதாக நானும் மற்ற வரிதாரர்களும் அசா1 கிருஷ்ணனுடன் சேர்ந்து சதி செய்து ஒரு பொய் புகார் கொடுத்து அந்த பொய் புகாரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் 22.10.2019ம்தேதி கிருஷ்ணன் என்பவர் பணம் கேட்பதாக கேள்விபட்டு அங்கு சென்றதாகவும் ஆஜர் எதிரிகள் இரண்டு பேரும் புண்ட மகனே என்ற வார்த்தைகளால் பணம் தரமுடியாது என்றும் எங்குவேண்டுமானாலும்போய் கொள்ளுங்கள் என்றும் இதற்கு மேல் பணம் கேட்டால் அடித்து கொலை செய்து விடுவோம் என்றும் கூறியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.1ம் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ரூ.33000 சீட்டில் ஒரு சீட்டுக்கு எவ்வுளவு செலுத்தினேன் என்றால் 5 சீட்டிற்கும் சேர்த்து ரூ.86250 செலுத்தினேன். ஒரு சீட்டுக்கு எவ்வுளவு என்று பார்க்கவில்லை. இந்த சீட்டில் ஒவ்வொரு சீட்டுக்கும் எவ்வுளவு தொகை செலுத்தி உள்ளேன் என்று சொல்ல முடியுமா என்றால் முடியவில்லை.

ரூ.50000 சீட்டில் ஒரு சீட்டிற்கு எவ்வுளவு செலுத்தினேன் என்றால்

5 சீட்டிற்கும் சேர்த்து ரூ.86950 செலுத்தினேன். ஒரு சீட்டுக்கு எவ்வுளவு என்று பார்க்கவில்லை.

ரூ.62000 சீட்டில் எவ்வுளவு செலத்தினேன் என்றால் ரூ.58700 ஒரு சீட்டுக்கு செலுத்தி உள்ளேன்.

ரூ.60000 சீட்டில் எவ்வுளவு செலுத்தினேன் என்றால் 5 சீட்டிற்கு ரூ.43300 செலுத்தினேன்.

ரூ.61000 சீட்டில் எவ்வுளவு செலுத்தினேன் என்றால் 5 சீட்டிற்கு ரூ.36950 செலுத்தினேன்.

நான் 5 சீட்டிற்கு செலுத்தியதாக சொல்லும் தொகையில் 1 சீட்டிற்கு உண்டான தொகை 5 ல்1 பங்கு என்றால் சரிதான். நான் மேற்படி தொகை விவரங்களை தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

நான் போலிஸ் விசாரணையில் ரூ.33000 சீட்டுக்கு ரூ.43300 என்று சொல்லவில்லை என்றால் அது மாற்றி சொல்லி விட்டேன்.

நான் போலிஸ் விசாரணையில் ரூ.60000 சீட்டுக்கு ரூ.86250 என்று சொல்லவில்லை என்றால் அதுவும் சீட்டு தொகையை மாற்றி சொல்லி விட்டேன்.

ஒவ்வொரு வாரத்திலும் ஏலக் கழிவு போகதான் சீட்டு பணம் செலுத்துவோம் என்றால் முழுத் தொகை செலுத்துவோம். ஏலக் கழிவை திருப்பி தருவார்கள். நான் போலிஸ் விசாரணையில் மொத்த தொகை ரூ.3,06,150 என்று சொல்லவில்லை என்றாலும் ரூ.3,12,150 என்று சொல்லி உள்ளேன் என்றாலும் சரிதான்.

கழிவு தொகை ஒரு நபர் போட்டிருக்கும் 5 சீட்டிற்கும் பொருந்தும் என்றால் சரிதான். கழிவு தொகையை சீட்டு பணம் செலுத்தியவர்களுக்கு உடனே கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபர் சீட்டுஏலம் எடுத்த பிறகு ஒவ்வொரு வாரமும் முழு சீட்டு தொகையை செலுத்த வேண்டும் என்றால் சரிதான். ஒரே நபர் ஒரு சீட்டில் ஒரு ஏலம் எடுத்த பிறகு அதற்கு அடுத்த வாரம் அதே நபர் ஏலம் எடுக்க முடியுமா என்றால் முடியாது. அதே ஆளுக்கு எப்படி கொடுப்பார்கள் என்றால் அந்த நபர் பணம் செலுத்தும் தன்மையை பொறுத்து கொடுப்பார்கள். நான் எல்லா வாரமும் ஏலத்தில் கலந்து கொள்வேன் என்றால் கூடுமான வரையில் 7 மணிக்கு கலந்து கொள்வேன். எல்லா வார சீட்டிலும் 2 வது சீட்டு மாயவன் கோயிலுக்கு தான் என்றால் சரிதான். நான் ஏலத்தில் கலந்து கொள்வதால் மற்ற நபர்கள் எத்தனை சீட்டுகள் போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அது சீட்டு எழுதிய நோட்டில் தான் தெரியும். பாதி நபர்கள் ஏலம் ஆரம்பிக்கும் முன்பே பணத்தை மட்டும் அனுப்பி விடுவார்கள் அதனால் யார் எத்தனை சீட்டுகள் போட்டுள்ளார் என்று

எனக்கு தெரியாது. ஏலம் கேட்கும் நபர் அவர் கேட்கும் தொகை போக மீதி தொகையை ஏல சீட்டாக கொடுப்பார்கள் என்றால் சரிதான்.

ஏலம் எடுத்த நபர்கள் உடனே பணம் பெற்று செல்வார்கள் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் இருக்கும் நபர் பெற்று செல்வார், எதிரிகளின் control ல் உள்ள மற்ற நபர்களுக்குரிய தொகையை எதிரிகள் பெற்று செல்வார்கள். சீட்டு ஏலம் எடுத்த நபர்கள் இந்த சீட்டு நின்றதாக சொன்ன பின்பு அந்த பணத்தை செலுத்த வில்லை என்றால் சரிதான். எதிரிகள் சீட்டு வசூலிக்காமல் சென்று விட்டதால் அவர்கள் செலுத்தவில்லை. நான் எடுத்ததாக சொல்லும் 4 சீட்டுக்கு சீட்டுகள் நின்றதாக சொன்ன பிறகு பணம் செலுத்தவில்லை என்றால் அவர்கள் நடத்தவில்லை என்பதால் செலுத்தவில்லை. நான் அந்த 4 சீட்டுகளும் எந்த வாரங்களில் எடுத்தேன் என்றால் அது ஞாபகம் இல்லை. நான் எடுத்த சீட்டுகளில் எத்தனை வாரங்கள் மீதி இருந்தது என்றால் ரூ.62000 சீட்டில் 112 வாரங்கள் செலுத்தபட்டுள்ளது. ரூ.60000 சீட்டில் 42 வாரங்கள் செலுத்தபட்டுள்ளது. ரூ.60000 சீட்டில் 78 வாரங்கள் சீட்டு செலுத்தவில்லை என்றால் சரிதான். சீட்டு நடக்கவில்லை.

காவல் ஆய்வாளர் என்னை தனிப்பட்ட முறையில் விசாரித்தாரா என்றால் இல்லை. நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல் 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியோ அவருக்கு வேண்டப்பட்டவரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்த வில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னத்தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

1ம் எதிரி தரப்பில்செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//563 /2024 |
| | : | Prosecution P.W - 6 |
| NAME | : | அருமைக்கிளி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 26.09.2024

முதல் விசாரணை

நான் வெய்க்காலிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அசா1 கிருஷ்ணன், அசா2 அந்தோணி ராஜ், அசா3 டேவிட் அமல்ராஜ், அசா4 செல்வராஜ், அசா5 ஜோசப்ராஜ் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்காரர்கள். ஆஜர்எதிரிகள் சீட்டு நடத்தினார்கள். என்னிடம் சீட்டுபோட கேட்டார்கள். அவர்களை நம்பி சீட்டு போட்டேன். ரூபாய் 50000 வாரச்சீட்டு போட்டேன். அவர்கள் நிறைய சீட்டு நடத்தினார்கள். நான் செலுத்திய சீட்டு 101 வாரங்கள் செலுத்தவேண்டும் நான் 42 வாரங்கள் சீட்டு செலுத்தி உள்ளேன். நான் இரண்டு சீட்டுகளை மேற்படி ரூபாய் 50000 வாரட்சீட்டில் செலுத்தி உள்ளேன். நான் ரூபாய் 34780 சீட்டு தொகையை மொத்தம் செலுத்தி உள்ளேன். சீட்டுத்தொகையை திருப்பி தரவில்லை. 2019 பொங்கலில் இருந்து சீட்டு

நடத்தவில்லை. 8 மாதம் கழித்து ஆஜர் எதிரிகள் வந்த பின்பு எல்லோரும் எங்கள் ஊர் மாயவன் கோவில் முன்பு வைத்து கேட்டோம். கிருஷ்ணனும் எல்லோரும் கேட்டபின்பு நான் எந்த சீட்டு பணமும் பிரிக்கவில்லை என்று யாருக்கும் கொடுக்கவேண்டியதில்லை என்றும் தேவிடியா மகனே, புண்ட மகனே என்று அசிங்கமாக பேசினார்கள். நாங்களும் கிருஷ்ணனும் அவமான பட்டு வெட்கப்பட்டு காவல் நிலையம் சென்றோம். கிருஷ்ணன் புகார் கொடுத்தார். போலிசார் என்னையும் விசாரித்தார்கள். எல்லோரையும் விசாரித்தார்கள். அந்த சீட்டில் நிறைய நபர் சேர்ந்திருந்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

ரூபாய் 50000 சீட்டு எப்போது ஆரம்பித்தார்கள் என்றால் தேதி ஞானபகம் இல்லை, படிப்பறிவு இல்லை சீட்டு போடச்சொன்னார்கள் போட்டேன். நான் ஏலத்தில் கலந்துகொண்டேனா என்றால் நான் ஏலத்திற்கு செல்வேன் ஏலம் கேட்கவில்லை. நான் ஏலத்திற்கு சென்ற அன்று யார் ஏலம் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ரூபாய் 50000 ஏலச்சீட்டில் மொத்தம் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. எப்போது ஏலம் விடுவார்கள் என்றால் ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் இரவு 8.00 மணி அளவில் ஏலம் விடுவார்கள். நான் செலுத்திய தொகையை எதை வைத்து சொல்கிறேன் என்றால் நான் சீட்டுக்கு பணம் செலுத்தியதை சொல்கிறேன். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு சீட்டுக்கு எவ்வளவு தொகை செலுத்துவேன் என்றால் ரூபாய் 500 செலுத்துவேன். நான் ஒரு வாரத்திற்கு எவ்வளவு பணம் செலுத்துவேன் என்றால் இரண்டு சீட்டுக்கு ரூபாய் 1000 செலுத்துவேன். ஏலச்சீட்டு எடுத்தவர்கள் பெயர் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. என்னுடன் ரூபாய் 50000 சீட்டு போட்ட நான்கு, ஐந்து நபர்கள் தெரியுமா என்றால் முத்துலட்சமி, செல்வி, இங்கு வந்துள்ள செல்வராணி. மேற்படி முத்துலட்சுமி, செல்வி, செல்வராணி ஆகியோர் இந்த 50000 சீட்டில் சீட்டு எடுத்துள்ளார்களா என்றால் இல்லை. எதிரிகள் 8 மாதங்கள் கழித்து வந்தார்கள் என்று சொல்லியுள்ளதில் அவர்கள் எங்கு இருந்தார்கள் என்றால் மறைவாக இருந்தார்கள். எதிரிகள் தலைமறைவாக இருந்தார்கள் என்று புகார்கொடுத்தேனா என்றால் இல்லை. மாயவன் கோவிலுக்கும் 1ம் எதிரி மாயவன் வீட்டிற்கும் எவ்வளவு துரம் என்றால்

எதிர்த்தால் போல் உள்ளது. மாயவன் வீடு ரோட்டிற்கு எந்த புறத்தில் உள்ளது என்றால் கீழ் உள்ளது . கோவில் மேல்புறத்தில் உள்ளது. காவல் நிலையத்திற்கு எப்போது சென்றோம் என்றால் காலையும், மாலையும் சென்றோம். காலையில் காவல் நிலையம் சென்ற போது புகார் கொடுத்தோமா என்றால் காலையில் புகார் கொடுக்கவில்லை. காலையில் போலிசாரிடம் சொன்னோமா என்றால் சொன்னோம். காலையில் யார் எல்லாம் காவல் நிலையம் சென்றோம் என்றால் நிறைய பேர் சென்றோம். காலையில்ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் காலையில்கொடுக்கவில்லை. மாலையில் எத்தனை மணிக்கு புகார் கொடுததோம் என்றால் மணி தெரியவில்லை. அந்த புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் நான் படித்து பார்க்கவில்லை. அந்த புகாரில் யார் எல்லாம் கையொப்பம் செய்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நான் அந்த புகாரில் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். அந்த புகாரில் மேற்படி சாட்சி செல்வராணி, பூங்கொடி சூசை, பாலமுருகன் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். என்னை போலிசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த மறுநாள் விசாரித்தார்கள். நான் வாரம், வாரம் பணம் செலுத்திய விவரத்தை எழுதி போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் நான் சீட்டு எழுதிகொடுக்கவில்லை நான் சொன்னேன் போலிசார் எழுதினார்கள். எத்தனை சீட்டு கட்டியிருக்கிறேன் என்று எனக்கு தெரியும். நான் ரூபாய் 34780 என்று நான் சொன்னேன் என்றால் சரிதான். அது கழிவுபோக மீதியுள்ள தொகை. 42 வாரங்களில் ஒவ்வொரு வாரமும் கழிவுத்தொகை வேறுவேறாக இருக்கும் என்றால் சரிதான். நான் மேற்படி 34780 என்ற தொகையை சொல்வதற்கு ஒவ்வொரு வார கழிவையும் எழுதி குறித்து வைத்தால்தான் என்னால் சொல்லமுடியும் என்றால் மற்ற சீட்டு போட்ட நபர்கள் எழுதிவைத்திருப்பார்கள் அதில் இருந்து கணக்கு பார்த்து சொன்னேன். நான் ஏலக்கழிவுத்தொகையை நான் வாங்கிக்கொண்டேனா என்றால் கழிவு தொகையை வாங்கவில்லை அதை கழித்து, கழித்து கொடுப்போம். மாயவன் கோவிலுக்கு 1ம் எதிரிதான் தலைவராக இருக்கிறார் என்றால் சரிதான். ராஜதுரைபொன்னுச்சாமி என்ற பொன்ராஜ் என்பவரும் மாயவன் கோவிலில் ஒரு தலைவராக இருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. அவர்கள் சொக்காரங்கள். 1ம் எதிரி மாயவன் அரசுப்பள்ளியில் ஆசிரியராக இருக்கிறார் என்றால் சரிதான். நான் சொல்வது போல்ஆஜர் எதிரிகள்

சீட்டு நடத்திஇருப்பது கிடையாது என்றாலும் என்னிடம் சீட்டு போடச்சொன்னாதாக கூறுவதும் அதை நம்பி நான் சீட்டு போட்டதாக கூறுவதும் பொய் என்றாலும் சரியல்ல. 1ம் எதிரி 8 மாதமாக தலைமறைவாக இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான்சொல்லும் 8 மாத காலத்தில் 1ம் எதிரி ஆசிரியர் பணி செய்தார் என்றாலும் தலைமறைவாக இல்லை என்றாலும் சரியல்ல. தலைமறைவாக இருந்ததுதான் போயிருப்பார். நான் சொல்வது போல் கிருஷ்ணனும் மற்ற நபர்களும் எந்த சீட்டு பணமும் எதிரியிடம் கேட்டு இருப்பது இல்லை என்றாலும் எதிரிகள் நான் சொன்னது போல் தேவிடியா மகனே, புண்ட மகனே என்று பேசியதில்லை என்றாலும் சரியல்ல. அசா1 கொடுத்த பொய் புகாருக்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அசா1 ஆனவர் ராஜதுரைபொன்னுச்சாமி என்ற பொன்ராஜ் தலைவராக இருக்கும் அணியில் இருப்பதால் 1ம் எதிரியை தலைவர் பதவியில் இருந்து நீக்கம் வேண்டும் என்று கொடுத்த பொய் புகாரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரிகும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

நீதிமன்ற கேள்வி நான் அந்த கோவிலில் வரிதாரா என்றல்

பதில் நான் வரிதாரர் இல்லை.

அசா1 எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதராவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவர் வேண்டியவர் அல்ல. அசா1 வேண்டியவர் அல்ல என்று பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் ஏழைகள் கஷ்டப்பட்டு பணம் செலுத்தினோம் அவர்கள் பணக்காராகா இருக்கிறார்கள். ஏமாற்றி பணக்கார்களாக இருக்கிறார்கள். நான் ஆண் துணை இல்லாமல் உழைத்து பணம் செலுத்தினேன்.

2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

ரூபாய் 50000 வாரச்சீட்டில் ஏலக்கழிவுத்தொகை போக மீதி தொகையைத்தான் இரண்டு சீட்டுக்கும் செலுத்துவேன் என்றால் சரிதான். என்னைபோல் மற்ற நபர்கள் ஒரே ஆள் நான்கு, ஐந்து சீட்டுகள் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஒரு நபர் ஐந்து சீட்டு போட்டிருந்தால் கழிவுத்தொகை ஐந்து சீட்டுக்கும் பொருந்தும் என்றால் சரிதான். நான் வாரத்திற்கு செலுத்தும் ரூபாய் 1000தில் கழிவுத்தொகையை கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். ஒரே நபர் நான்கு, ஐந்து சீட்டு

போட்டிருக்கும்போது அதே நபர் ஒரு சீட்டு எடுத்த பின்பு மறுவாரம் சீட்டு எடுக்கமுடியுமா என்றால் எடுக்க முடியாது. ஒரே நபர் அடுத்த சீட்டை கேட்டால் என்ன செய்வார்கள் என்றால் கொஞ்ச நாள் கழித்து கொடுப்பார்கள். இரண்டாவது சீட்டு தொகை மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். அதனால்தான் சீட்டு கோவிலில் வைத்து நடந்தது என்றால் சரிதான். ரூபாய் 50000 சீட்டில் எவ்வளவு அதிக ஏலம் போனது என்றால் அது எனக்கு தெரியவில்லை. ஒவ்வொரு வாரமும் ஏலம் கேட்கும் அதிக தொகையை கழிவாக எடுத்துக்கொள்வார்கள் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபர்ருக்கு கழிவு போக மீதித்தொகையை கோவிலில் வைத்து கொடுப்பார்கள் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபர் ஏலம் எடுத்த சீட்டில் இருந்து அடுத்த சீட்டு முதல் கழிவு இல்லாத முழுத்தொகையை செலுத்த வேண்டும் என்றால் சரிதான். ரூபாய் 50000 சீட்டில் ஏற்கனவே 42 சீட்டுகள் பணம் எடுத்தவர்கள் அந்த 42 வாது சீட்டுக்கு பிறகு பணம் செலுத்தவில்லை என்றால் ஆமாம். ரூபாய் 50000 சீட்டில் என்னுடன் சீட்டு போட்ட எல்லோருக்கும் என்னைபோல் 42 சீட்டுகள் முடிந்திருக்கும் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல முதல் விசாரணையில் சொன்னது போல் இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியோ அவருக்கு வேண்டப்பட்டவரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்த வில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

1ம் எதிரி தரப்பில்செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi